திரு. எம். எஸ். மணி: தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பித்துக் கொடுப்பதைத் தடை செய்ய வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அவர்கள் தனிப்பட்ட முறையில் வீட்டுக்கு மாணவர்களை வரச்சொல்லி கற்பிக்கிறார்கள் என்றால், அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கு அசராங்கம் என்ன முயற்சிகளை மேற்கோண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே கூட அந்த விதி முறை இருக்கிறது. உடனடியாகத் தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எந்த வகுப்பு மாணவர்களுக்கு எவ்வளவு நேரம் சொல்லிக் கொடுக்கிறார்கள், எவ்வளவு பணம் வாங்குகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அந்தப் பணத்திற்குக் கூட ஒரு வரம்பு விதித்து இருக்கிறோம். அந்த வரம்பை மீறி அவர்கள் செய்கிறார்களா என்று பார்க்கப்படுகிறது. அதற்கான அனுமதியை அவர்கள் வாங்க வேண்டும். 200 ரூபாயாக இருந்தால், டிவிஷனல் இன்ஸ்பெக்டருடைய அனுமதியை வாங்க வேண்டும், 100 ரூபாயாக இருந்தால் மாவட்டக் கல்வி அதிகாரியினுடைய அனுமதியை வாங்கவேண்டும் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். அனுமதியின்றிச் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : பள்ளியாசிரியர்கள் தனியாகப் பாடம் சொல்லிக் கொடுப்பது மாணவர்களுடைய அறிவும், திறமையும் வளருவதற்கு ஏதுவாகிறது. ஆனால், அதே நேரத்தில், பள்ளியிலே திறமைக் குறைவான போதிப்பு நடைபெறுகிறதே, அதைத் தடுப்பதற்கும் எந்த முறையைக் கையாண்டால் மாணவர்களின் கல்வி அறிவு சரியாக வரும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளிகளிலே சிறந்த முறையில் கற்பித்து, மாணவர்களை உற்சாகப்படுத்துவதுதான் நல்லது என்பது அரசாங்கத்தினுடைய கருத்து. மாணவர்கள் தனித்துப் படிக்கவேண்டும் என்று விரும்புவதில்லை. யாரோ ஒரு சில மாணவர்களுடைய பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளின் கல்வித் தகுதி குறைந்திருக்கிறது, ஆகவே அதிகத் தகுதி பெறுவதற்கு ட்யூஷன் வேண்டும் என்று கருதினால் அதை நாம் ஆட்சேபிக்க முடியாது.

தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

* 539 வினு :—**திரு. பெ. சௌந்தர பாண்டியன்.** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுபவர் தலைமை ஆசிரியராக பணியாற்றும் போது ஊதியம் அதிகமாக கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) இல்லை. ஆயினும் 3-11-61 தேதி வரை தலைமை ஆசிரியர் படி பெற்று வந்த உள்ளாட்சி மன்றத் தலைமை ஆசிரியர்களுக்கு அது தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

(இ) அரசின் நிதி நிலைமை சிரமமாக இருப்பதே காரணம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதர துறைகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு, அவர்கள் வகிக்கின்ற பொறுப்புக்குத் தக்கபடி ஊதியம் அளிக்கப்படுகிறது. அதுபோல் தொடக்கப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் அத்தகைய ஊதியம் தருவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, தகுந்த முறையில் நம்முடைய பே கமிஷன் அவர்களுடைய சம்பளத்தையும், படியையும் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் கொடுத்து வருகிறோம். அதிலே, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும்

தலைமையாசிரியர்களுக்குத் தனியாகப் படி கொடுத்துவந்திருக்கிறார்கள். அது பிற பள்ளிகளில் கிடையாது. அந்தப் படியை 1961ம் ஆண்டில் எடுத்துவிட்டிருக்கிறார்கள். மறுபடியும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு பி. வேலுசாமி: இந்தத் தொடக்கப் பள்ளியிலேயிருக்கும் மாணவர்கள் முழுதுமாக சாதாரண பிஞ்சு உள்ளங்களோடு இருக்கிறவர்களாகையால் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு கல்வி போதிக்கும் முறையை அரசு கொண்டுவருமா ? அப்படிப் போதிப்பதன் மூலம் அந்த இளம் பிஞ்சு உள்ளங்களின் வளர்ச்சி சரியாக இருக்கும் என்று சர்க்கார் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆசிரியர் பயிற்சிக்குத் தாய் குலத்திலிருந்து ஏராளமானவர்கள் எடுக்கப்படுகிறார்கள். இன்றைக்கும் ஏராளமானவர்கள் அவர்களில் பணியாற்றுகிறார்கள். அவர்களிலே சிறந்த முறையில் பணியாற்றுகிறவர்களும் உண்டு. மோசமானவர்களும் இருக்கலாம். ஆகவே, தாய்க்குலம்தான் அதற்குத் தகுந்தவர்கள் என்று நாம் சொல்லிவிட்டால் ஆண்குலம் எதிர்க்கும் என்று நம்புகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas elementary school teachers who serve as headmasters are expected to do some extra work in their capacity as headmasters, is the Government aware of the fact that private managements are giving incentives from their funds to the teachers employed as headmasters and, if so will the Government fall in line with this policy of giving a 'headmaster allowance' to such of those teachers who work in that capacity?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னிடத்தில் இருக்கக்கூடிய தகவலின்படி தனியார் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய தலைமையாசிரியர்களுக்கு இந்தப் படி கொடுக்காத காரணத்தாலே பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் வேலை பார்த்து வருகின்ற தலைமையாசிரியர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்று முன்பிருந்த அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால், என்னுடைய கருத்து அவர்களுக்குக் கொடுக்காததால் இவர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்பது அல்ல. இவர்களுக்குக் கொடுப்பது நியாயம் என்று கருதுகிறேன். அதைப் பற்றி அரசாங்கம் இப்பொழுது பரிசீலித்து வருகிறது.

சிறு தொழில்கள்.

*540 வினு—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களை பலப்படுத்தவும், அவைகளுக்கு ஊக்கமளிக்கவும் சர்க்காரின் நடவடிக்கை என்ன ?

(இ) இவைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், சிறு தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யும் பண்டங்களை இதர பெரிய தொழில்களின் மூலம் உற்பத்தி செய்வதை தடை செய்ய திட்டம் ஏதேனும் இருக்கின்றதா ?

(உ) அப்படி எந்தெந்த பண்டங்கள் சிறு தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன, மேலும் என்னென்ன பொருள்களை ஒதுக்க உத்தேசம், விவரம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை [a] ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

[a] 832—835-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.